2004 பிப்ரவரி 13]

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து வருகிற ஆண்டிலே அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையினைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு கொறடா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மலர்ந்தவுடன் ஒன்றியத்திற்கு 15 பயனாளிகளுக்கும் புறக்கடை கோழி வளர்ப்புக்காக மானியக் கடன் வழங்கப்பட்டது. அதைப்போல ஒன்றியத்திற்கு 5 பயனாளிகளுக்கு எருமைக் கிடேரி கன்றுகளுக்கும் கடன் உதவி வழங்கப்பட்டது. இதில் ஆடுகளுக்கான கடனுதவியும் அடங்கும். நிதி நெருக்கடி காரணமாக, அவ்வாறு தொடர்ந்து வழங்க இயலாத காரணத்தால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நாளையொட்டி புறக்கடை கோழிவளர்ப்புக்கு முழு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. அரசின் நிதி நெருக்கடி சீரானதும் வருகின்ற மானியக் கோரிக்கையின்போது பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்படுவதுடன், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களின் கோரிக்கையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

76—

சமூகக் காடுகள்

***38836—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, எதுமலை ஊராட்சி, காமாட்சிபுரம் கிராமத்தை நடப்பாண்டில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, எதுமலை ஊராட்சியைச் சேர்ந்த காமாட்சிபுரம் என்ற குக்கிராமம், வரதராஜபுரம் கிராமத்துடன் இணைந்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் திட்டப் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டு, வனத்தைச் சார்ந்து வாழும் காமாட்சிபுரத்தைச் சேர்ந்த 15 வனக் குழு உறுப்பினர்களுக்கு மாற்றுத்தொழில் செய்வதற்காக ரூபாய் 46,759/-கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. காமாட்சிபுரம் கிராமத்தில் கண்மாய் ஏதும் இல்லை. அதனால் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இக்கிராமத்தைச் சேர்க்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் உள்ள எதுமலை என்ற ஊரில் உள்ள.....

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி மல்லிகா சின்னசாமி: ஏரியில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.8.10 இலட்சத்திற்கு தூர் வாரும் பணி நடைபெற்றது. அதனால் அந்த ஏரியில் நீர்வரத்து மழை பெய்ததால் அதிகரித்து, அங்குள்ள விவசாயிகள் ஒரு போகம் பயிர் செய்தவர்கள் இன்றைக்கு இரண்டுபோகம் பயிர் செய்யும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகிய மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தால் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாலும், எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் உள்ள மணியாங்குறிச்சி ஊராட்சியில்

2004 பிப்ரவரி 13]

காப்புக்காட்டை ஒட்டியுள்ள ஸ்ரீதேவிமங்கலம் என்ற கிராமத்தையும், எதுமலை காப்புக்காட்டை ஒட்டியுள்ள பெரகம்பி கிராமத்தையும் நடப்பாண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி-2, தமிழ்நாடு இயற்கை வள நிர்வாகத் திட்டம் என்று அழைக்கப்பட்டு, அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி, ரூ.779.33 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கிக்கு திட்டத்தை நிறைவேற்ற கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் நிதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

77—

கிரயப் பத்திரம்

***19160—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், நேரு நகர் மற்றும் துர்காதேவி நகரில் வசிப்பவர்கள் குடிசை மாற்று வாரியத்திற்கு முழுத் தொகையையும் செலுத்திய பின்பும் கிரயப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) அவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,